இலவச வெளியீடு


# ஒளி

போரூட், யாழ். கிழக்கு

FREE ISSUE

ஒளி: 2 கதிர்: 4

நல்லதொரு குடும்பம் - பல்கலைக்!கழகம்



- ★ How Parents Can Help
- ★ எமது கிராமமும், போரூட் நிறுவனமும்
- ★ போதைவஸ்தின் பிறப்பிடமும், மாணவ — சமூகத்தின் அழிவும்
- ★ ஒரு கிராமத்தில் பாலர் முன்னிலைக் கல்வியின் முக்கியத்துவம்
- ★ வடமராட்சியில் போரூட் செயற்பாடுகள் - 1992
- ★ போரூட் செய்திகள்
- ★ பூமியின் உடல் சூடேறுகிறது

காலாண்டு இதழ்

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி - 1992

FORUT, *Jaffna East, Point Pedro.*

**சமத்துவம் - சகோதரத்துவம் - நல்லொழுக்கம்
சமாதானம் - அபிவிருத்தி.**

Remember, it's more likely that youngsters may turn to drugs if they come from a home where the adults appear to be dependent on legal drugs like tobacco or alcohol.

Therefore, it's important to set a good example and be a model for your children to follow.

Show interest in your children, know what they are doing, who their friends are, where they go and what they do in their spare time.

Keep open or open up avenues of two-way communication with your children. Make time to talk to your son or daughter particularly if they want to sound you out on the subject. Get to know their hopes and fears. Give them the confidence that comes from knowing that you care, and will help if they have problems of any sort. All this is important, because young people who have good relationships with their parents are less likely to feel the need to try drugs.

Don't dwell only on the horrors and dreadful effects of drugs. However convinced you are, you will not convince someone who has tried drugs and enjoyed them, or knows someone who has. In fact, it will make anything else you say less believable.

Don't be over-suspicious of your children. This could be quite unfair. And it could push them into drug - taking, instead of away from it.

## WHAT ARE DRUGS?

As we said earlier, drugs can mean everything from cigarettes and alcohol to heroin.

The effects of these drugs vary, depending on how they are used and the people taking them.

Any of them, however, can cause problems when misused.

# எமது கிராமமும், போரூட் நிறுவனமும்

இ. குணசேகரம்
தலைவர், கெருடாவில் மத்தி சங்கம்

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை" என்ற வாக்கிற்குஇணங்க எமது கிராமத்திலே பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தினையே மேற்கொண்டுள்ளனர்.

எமது கிராமத்தில் உள்ள மக்களுக்கு நல்ல உதவிகள் செய்ய வேண்டுமென்ற நோக்கில் 1989-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி அம்பிகை சிக்கன கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்திலிருந்து எமது அங்கத்தவர்களுக்கு விவசாயக்கடன் கிடைத்துள்ளது. இதனால் அனேகமாக 90க்கு மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாகப் பயன்பெற்றன.

அங்கத்தவர்கள் நீரிறைக்கும் இயந்திரங்கள் பெறமுடியாது மிகவும் சிரமப்பட்டபோது போரூட் - அவர்களுக்கு நீரிறைக்கும் இயந்திரம் தருவித்து வழங்கியது. இதன் காரணமாக மக்கள் தமதுதேவைகளை மிகவும் சுலபமாக நிறைவேற்ற முடிந்தது.

அண்மைக்காலத்தில் உரவகைகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் விலையேற்றத்தினையும் தட்டுப்பாட்டினையும் கருத்திற்கொண்டு விவசாய உள்ளீடுகளைக் கடனாக வழங்க நடவடிக்கை எடுத்த போரூட் நிறுவனத்தின் ஈடிணையற்ற சேவையை மறக்கவே முடியாது.


இது மட்டுமன்று - எமது அங்கத்தவர்களின் அறிவு வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இங்கு ஒரு பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான கட்டட அமைப்புக்கு சங்கமும், அங்கத்தவர்களும் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளனர். அதேசமயம் போரூட் நிறுவனமும் எமக்கு ஓரளவு கட்டட நிதியை வழங்கியதுடன், பாலர் பாடசாலைக்கான தளபாடங்கள் வழங்கியும், கற்றல் உபகரணங்கள் வழங்கியும், ஆசிரியைகளுக்கான சம்பளம் வழங்கியும் அவர்களுக்கு பயிற்சியும் அளித்து வந்துள்ளது. இதனால் கிட்டத்தட்ட 50 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

மேலும், போரூட் எமது கிராமத்தில் காலூன்றியபோது ஒரு சங்கத்தினை மட்டும் ஏற்படுத்தவில்லை. அதனுடன் வங்கிச்சேவையையும் அறிமுகப்படுத்தியது. அதனால் அன்றுதொட்டு மக்கள் சேமிப்புப் பழக்கத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த வங்கியில் அங்கத்தவர்களும், அங்கத்தவர் அல்லாதவர்களும் சேமிப்பு இட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சாதாரண சேமிப்பு, நிலையான சேமிப்பு' சிறுவர் சேமிப்பு எனப் பலவகைப்பட்ட வங்கி நடவடிக்கைகளை மக்கள் இலகுவாகப் பழகவும், அதனால் மேலான நன்மை பெறவும் போரூட் ஒரு மேலான வழிகாட்டியாக விளங்குகின்றது.

எமது சங்கம் உண்மையான நடைமுறைப்படி நோக்குமிடத்து மிகவும் கூடிய விரைவில் சொந்தமாக தனித்து இயங்கக்கூடிய நிலைக்கு வந்துவிடும் என்று திடமாக நம்புகின்றோம் அப்படிப்பட்ட ஒரு நிலையை எய்தும் வரைக்கும் போரூட்டாகிய ஊன்றுகோல் நிச்சயம் வேண்டும்.

எமது நடவடிக்கைகள் சமாதானம், சகோதரத்துவம், நல்லொழுக்கம் ஆகிய வழிகளில் இலக்கு மக்களைச் சென்றடைய போரூட்டுடன் இணைந்து அரிய சேவையை அனைவர்க்கும் அள்ளிவழங்க ஆவலாய் உள்ளோம். உண்மையான அபிவிருத்தியென்பதை மக்களது ஊக்கத்தினையும், விடாமுயற்சியையும், ஈடுபாட்டினையும், அர்ப்பணிக்கும் மனப்பாங்கினையும் வைத்தே இலகுவாக அடையக் கூடியதாகும்.

இன்று சிறுபிள்ளைகள் முதல் வயதுவந்தவர்கள் வரை போரூட்டின் சேவையை உணராதவர்கள் எமது கிராமத்தில் இல்லையென்றே கூறவேண்டும்.



# போதைவஸ்தின் பிறப்பிடமும் மாணவ சமூகத்தின் அழிவும்

க. சரவணமுத்து
பருத்தித்துறை, கோட்டக்கல்வி அலுவலகம்

போதைவஸ்தின் அபாயகரத்தைப் புரிந்துணர்வதற்கு ஏதுவாக அதன் ஆரம்ப உற்பத்தியையும் அதனால் முக்கியமாக மாணவ உலகத்திற்கு ஏற்படும் பக்க விளைவுகளையும் புரிந்துணர்வது மிகவும் பயன் உடையதாகும்.

போதைவஸ்தின் உற்பத்திக்கு மூலப்பொருட்களாகிய கஞ்சா/அபின் (Poppy - Papaver Somniferum) போன்றவை எவ்வகையில் உற்பத்தியாக்கப்படுகின்றன என்பதை உலகளாவிய விபரங்களில் நாம் தெரிந்து கொள்ளுதல் பயனுடையதாகும். இலங்கையில் கஞ்சா/அபின் போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி செய்வது சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் பின்தங்கிய காட்டுப் பிரதேசங்களில் இவை உற்பத்தியாக்கப்படுவதாகவும், இவற்றை சிறிதளவாகக் கடத்தி பல்வேறு இரசாயனத்தின் பொய்யான சேர்க்கையுடன் தயாரிக்கப்பட்ட பவுடர்/குளிகை அல்லது வில்லைகளைத் தயாரித்து மாணவ உலகத்திற்கு விற்பனை செய்து பெரும்பணம் ஈட்டும் கொழுத்த முதலாளிகளின் விபரங்கள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வேளையில் உலக ரீதியாக இந்த அபாயகரமான வஸ்து எப்படித் தயாராகிக் கடத்தப்படுகின்றது என்பதை உலக நலன்விரும்பி நாடுகளின் கணிப்பின்படி ஆராய்வோம்.

இளம் சந்ததிக்கு கிளுகிளுப்பு உண்டாக்கி மயக்கி உயிர் குடிக்கும் போதைவஸ்துகளாகிய 1. மோபீன் (Morphine) 2. ஹெறோயின் (Heroin) 3. கயிற்றோமோபீன் (Hydromorphine) 4. ஒக்சிகொடோன் (Oxycodone) 5. டிப்பிறநோபீன் (Diprenorphine) போன்றவை முக்கியமாக அண்டைநாடு ஒன்றில் அரச அனுமதியுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தொகையில் அனுமதி பெற்று உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த உற்பத்தி வயல்களில் கஞ்சாச் செடிகள் வேறாகவும், அபின் செடிகள் வேறாகவும் (பொப்பிச்செடிகள்) 23500 ஏக்கரில் உற்பத்தி செய்து, சிறப்பாக இவை ஐப்பசி, கார்த்திகை, பங்குனி மாதத்தில் அறுவடை செய்யப்படுகின்றது. இந்தச் செடிகள் முற்றிய காலத்தில் பூப்பூத்து ஒருவித விசநெடி பரப்பும் என்றும், இந்த வாசனையே மனித உடலுக்குப் பெரும் தீங்கை வீளைவிக்கும் எனவும், இந்த விஷப் போதைவஸ்தை உட்கொள்வதால் ஏற்படும் பக்க விளைவுகளை நாம் மிகவும் சுலபத்தில் ஆராய்ச்சி எதுவுமின்றிப் புரிந்து கொள்ளலாம் என்றும் சொல்லப்படுகிறது.

அபின் செடிகள் மொட்டு விட்டதும் இதற்காகச் செய்யப்பட்ட லாஞ்சற் கருவியை (Lancet) சூரிய அஸ்தமனத்தின் பின்னர் பூ மொட்டுகளில் செருகி அதன் பாலைப் பக்குவமாகச் சேகரித்து உறைய

வைத்து பிசின் போன்ற வஸ்துவாக தயார் செய்கின்றார்கள். இவற்றின் தரங்களை ஒன்றிலிருந்து ஆறுவகையாகப் பிரித்து பாவனைக்கு எடுப்பார்கள். முதலாம் தரம் மிகச்சிறந்த ரகமாகவும், ஏனைய தரங்கள் ரசாயனப் பசளை இடுவதால் நீரோட்டமுள்ளதாக இருப்பதின் காரணத்தால் தரம் குறைந்த ரகமாகவும் கணிக்கப்படுகின்றன.

அல்கலயிட்ஸ் (Alkaloids) என்பது அபினில் இருப்பதால் இது மருத்துவத்தில் நோ போன்றவற்றைக் குணப்படுத்தும். இதன் விதைகள் உணவுக்குரிய எண்ணெய் தயாரிப்பதற்கும், சர்பத் போன்ற பானங்களுக்கு குளிரான சுவை ஊட்டுவதற்கும் பாவிக்கின்றார்கள்.

கஞ்சாச்செடி பருமனடைந்து முற்றியதும் அதை வேரகற்றி வெட்டி மிகுதிகளை உலரவைத்து இரசாயனக் கலவைகள் சேர்த்து பவுடர்களாக்கி முடியுமானவரைக்கும் கலப்படம் செய்யப்பட்டு உலகச் சந்தைக்குக் கடத்தல் மூலம் எடுத்துச் சென்று பெரும் பணம் ஈட்டுகிறார்கள். இது போன்றே அபின் செடிகளையும் பக்குவப்படுத்தப்பட்ட மலைப்பிரதேசங்களில் இரசாயன முறையான பசளையிட்டு உற்பத்தி செய்து அவை பூக்கும்பொழுது அந்தப் பூ மொட்டுக்களிலிருந்து விஞ்ஞானமுறையில் உறிஞ்சியெடுக்கப்படும் சிறிய கருவிகளால் அதன் பாலைச் சேகரித்து அவற்றுடன் இரசாயனக் கலவைகளைச் சேர்த்துப் பிசின் போன்ற வஸ்துகளாக மாற்றி வியாபார நோக்குடையவர்கள் நஞ்சுத்தன்மை பொருந்திய இரசாயனச் சேர்க்கைகளைச் சேர்த்து பவுடர்களாகவும் வில்லைகளாகவும் இரகசியமான இடங்களில் தயாரித்து உலகநாடுகளுக்குக் கடத்தல் மூலம் விற்பனை செய்து பெரும் பொருட்கள் ஈட்டுகின்றார்கள்.

கடத்தல்காரனின் பாரிய அபிலாசைகள் பெரும்பொருள் ஈட்டுதே. இந்த நச்சுப்பொருட்களால் உருவாக்கப்பட்ட பவுடர் / வில்லைகள் எத்துணை எதிர்விளைவுகளை முக்கியமாக இளம் சந்ததியினர்களிடம் உண்டாக்கும் என்பதை உணர்ந்தும் தமது அபிலாசைகளான பண ஈட்டத்திற்காகச் சந்தைப்படுத்துகின்றார்கள். நமது இளம் சந்ததியினரின் அழிவிலும் நலிவிலும் தமது ராசபோக வாழ்வுக்குரிய பெரும் பணத்தைப் போதைவஸ்துக் கடத்தலால் ஏகபோக உரிமையைப் பெற்று வாழும் கும்பலை உலகரீதியாகத் தண்டிப்பதற்கு முடியாததாக உள்ள காரணிகளில் சில அவர்களின் பாதுகாப்பிற்கு அரசியல்வாதிகளும் சமூகவிரோதிகளும் உதவிபுரிவது ஒன்றேயாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியிலுள்ள (Narcotics Act) சட்டங்களின்படி இந்த போதைவஸ்துக்களைக் கடத்தல் செய்பவர்களுக்கு 10 வருடம் தொடக்கம் 20 வருடத்திற்குரிய மறியலும் ஒரு இலட்சம் தொட்டு இரண்டு இலட்சம் வரையிலான பணத்தண்டமும் விதிக்கப்படலாம்.

இந்தக் கொடிய விசத்தின் தன்மையை உணர்ந்து மாணவ சமூகமாவது தப்ப ஆவன செய்யப்படல் வேண்டும்.

# ஒரு கிராமத்தில் பாலர் முன்னிலைக் கல்வியின் முக்கியத்துவம்

**செல்வி புஷ்பம் விஸ்வலிங்கம்**
*கெருடாவில் மத்தி*

சமுதாயம் என்ற பெரு விருட்சத்தின் கீழ் சிறந்த விதைகளாக இருப்பவர் பாலர் என்போர் ஆவர். அதாவது அச் சமுதாயத்தின் சிறு விளைவுகள் சிறுவர்களே. அந்தச் சிறுவர்களாகிய பாலர்களை நன்நெறிப் படுத்தி ஊட்டமுடனும், ஊக்கத்துடனும் வளர்க்கின்ற நாற்று மேடைகளாக இருப்பவை பாலர் பாடசாலைகளாகும். இப் பாலர் பாடசாலைகள் மூலம் ஊட்டப்படும் கல்விதான் பாலர் முன்னறிவுக் கல்வியாகும். இவ்விதமான பாலர் முன்னறிவுக் கல்வி ஒரு கிராமத்தில் எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றதென்பதை ஆராயவேண்டியுள்ளது.

இங்கு இரண்டு விடயங்கள் ஆராய்வுக்கு உட்பட்டவை. ஒன்று பாலர் என்பது யார்? அவர்களின் உடல், உள, மொழி, அழகியல் சமூக அபிவிருத்திகள் எண்ணக்கரு போன்றவை எப்படியானவை? என்பதாகும். இரண்டாவது பாலருக்கு அளிக்கப்படும் முன்னிலைக் கல்வி எவ்விதம் அமையவேண்டும் என்பதாகும். இவ்விரண்டு ஆய்வுகளும் ஒரு கிராமத்தில் வலுவான வளர்ச்சிக்கு உதவுகின்ற அடிப்படையிலும், பாலருக்கு ஊட்டப்படும் அறிவின் கொள்ளளவிலும் தங்கியுள்ளது.

ஒரு கிராமம் என்பது பலதிறப்பட்ட இயல்புகளை, பல்வேறுபட்ட நெளிவு, சுழிவுகளைக் கொண்ட ஒரு அமைப்பாகும். அங்கு அமைதி இருக்கும். மௌனம் இருக்கும், புரட்சி இருக்கும். புயலிருக்கும். சுருக்கமாகச் சொல்லப்போனால் சுடரும், சூறாவளியும் சுற்றிவரும் ஒரு இயற்கை வளம்தான் கிராமம் ஆகும். இக் கிராமத்தில் பல்வேறு குணாதிசயங்களைக் கொண்ட மக்கள் வாழ்வர். ஏற்றத்தாழ்வுகள் அவர்களிடையே காணப்படும். சாதி, சமய வேறுபாடுகள் காணப்படலாம். இப்படியானதொரு அமைப்பிலிருந்து பலவகையான குணம், குறிகளுடன் பாலர்கள் பலர் இக் கல்விக்கு அழைத்துவரப்படுகின்றனர். ஆரம்பப் பாடசாலைக் கல்விக்கு இவர்கள் புகுமுன் பாலர் கல்வியை ஆரம்பிக்கின்றனர். அதாவது பாடசாலைக்குச் செல்ல ஆயத்தப்படுத்தும் ஒரு அறிமுக/முன்னிலை ஊட்டலை இவர்கள் பெற வேண்டியுள்ளனர்,

பிறந்து மூன்றாம் பருவத்தை அடையும் காலம் வரை பெற்றோரின் அன்பு, ஆதரவு, அரவணைப்பில் வளர்ந்த இப் பிஞ்சுக் குழந்தைகள் முதற்கண்ணாக முன்னிலைப் பாடசாலையில் காலெடுத்து வைக்கின்றனர். அங்கு வரும்போது அவர்களிடம் மருட்சி, வெருட்சி, பயம், கூச்சம், வெறுப்பு போன்ற பாதகமான நடத்தைகளும் மகிழ்ச்சி சந்தோசம், உற்சாகம், களியாட்டம் போன்ற சாதகமான நடத்தைகளும் காணப்படும். இந்நிலையில்தான் பாலர் முன்னிலைக் கல்வி அவர்களுக்கு மிகவும் நிதானத்துடனும், பொறுமையுடனும், அவதானத்துடனும் ஊட்டப்படல் வேண்டும்.

பாலர் பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைகளுக்கு பாலர் முன்னிலைக் கல்வியை ஒரு தகுதியான, பொருத்தமான ஆசிரியை புகட்ட வேண்டும். முன்னிலைப் பள்ளி ஆசிரியை தான் ஆசிரியை என்ற அகங்காரமின்றி, தலைக்கனம் உடையவராக, தண்டனை கொடுத்துக் கற்பிப்பவராக இருக்கக்கூடாது. முன்னிலைப்பள்ளி ஆசிரியை தனது ஆசிரிய பதவியினின்றும், ஒரு படி கீழிறங்கி இப்பாலர்கள் தம் வீட்டில் தாயுடன் எவ்விதமிருந்தார்களோ அதே போன்று இங்கும் தாயாக மாறவேண்டும். தாயின் அன்பு, பாசம், ஆதரவு, அரவணைப்பு' கலந்துரையாடல் அங்கு காணப்படவேண்டும். இதன் மூலம் கூறப்படும் சாதகமான விளைவுகள் உண்டாகும்.

பாலர் முன்னிலைக் கல்வியை பெறும் ஒரு பிள்ளை முதலில் ஒரு வழிகாட்டலைப் பின்பற்றப் பழகுகின்றது. இப் பழக்கம் எதிர்காலத்தில் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் செய்யப்படுகின்ற ஆற்றலை வளர்க்கின்றது. பாலர் பாடசாலைகளில் வழங்கப்படும் சில அறிவுறுத்தல்களை ஏற்று பிள்ளை கீழ்ப்படிவுத் தன்மையைப் பெறுகின்றது: இது எதிர்காலத்தில் பெற்றோருக்கு, பெரியோருக்கு, தலைவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் ஆற்றலை வளர்க்கின்றது.

சகோதரத்துவப் பண்பினை பாலர்கள் பெறுகின்றார்கள். இதன் மூலம் ஏற்றத்தாழ்வுகள் அற்ற ஒரு சமுதாயத்தினைப் படைக்கும் ஒரு சிற்பிகளாக பாலர்கள் உருவாகின்றனர்.

பாலர் முன்னிலைக் கல்வியில் கூட்டுறவு வாழ்க்கைப் பண்பு உணர்த்தப்படுகின்றது. ஒற்றுமையின் முக்கியத்துவத்தைப் பிள்ளைகள் உணர்வார்கள். பலதிறப்பட்ட சிந்தனைகள் உருவாக, பரிமாற்

றம் செய்யப்பட்ட பாலர் கல்வி நிலையங்கள் உதவுவதனால் பிள்ளைகள் தங்கள் சிந்தனையை வளர்த்து புது வடிவங்களை உருவாக்கும் திறமைசாலிகள் ஆகின்றனர்.

சமய, சமூக நற்பழக்கங்கள் இக் கல்விமூலம் ஊட்டப்படுவதனால் ஒரு கிராமத்திற்குத் தேவையான நற்பிரஜைகளை இப் பாலர் கல்வி நிலையங்கள் உருவாக்குகின்றன.

அன்பு, பணிவு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை போன்ற குணங்கள் இப் பாலர் பாடசாலை மாணவர்களிடையே பரிமாற்றிக்கொள்ளப்படுவதனால் ஒரு அமைதியான, சமாதானமான கிராமம் உருவாக ஏதுவாகின்றது.

எனவேதான் சிறந்த, பொருத்தமான பாலர் முன்னிலைக் கல்வி பாலர்களுக்கு ஊட்டப்படவேண்டும். இவ்விடயத்தில் சமுதாயமும், பெற்றோரும், ஆசிரியர்களும் தவறுவார்களேயானால் ஒரு தண்டனைக்குரிய. குற்றவாளியாகும் பிள்ளையை உருவாக்கும் பாவமான காரியத்துக்கு அவர்கள் எல்லோரும் உடந்தையாகிவிடுவார்கள் என்பது உண்மை.

'எத்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே — அவர்
நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும்
அன்னை வளர்ப்பினிலே'

என்பது ஒரு புகழ்பெற்ற பாடல். அன்னையின் கையிலிருந்து ஆசிரியையின் கைக்கு ஒரு பிள்ளை மாற்றப்படுகின்ற காலமே இக் கல்வி பெறும் காலமாகும். அதனால் பாலர் கல்வி புகட்டும் ஆசிரியை அன்னைக்குரிய பொறுப்புடனும், பண்புடனும், நிதானத்துடனும் புகட்ட வேண்டும். பிள்ளையின் மனநிலை அறிந்து இக்கல்வி ஊட்டப்படல் வேண்டும். இத்தகைய ஊட்டலைப் பெறும் எந்த ஒரு பிள்ளையும் எதிர்காலத்தில் விடிவெள்ளிகளாகத் திகழ்வர். இதற்குக் காரணமாக அமைவது பாலர் முன்னிலைக் கல்வியும் அதனை ஊட்டுகின்ற பாலர் பாடசாலை ஆசிரியைகளுமே ஆகும்.

# வடமராட்சியில் போரூட் செயற்பாடுகள் - 1992

## 1. வருமான அதிகரிப்பிற்கான ஊக்குவிப்பு:

| | | |
|---|---|---|
| 1-1 | கடற்றொழிற் கிராமங்கள் | 22 கிராமங்கள் |
| | பயன்பெறுவோர் | 222 குடும்பங்கள் |
| 1-2 | விவசாயம்: | |
| | பழைய கிராமங்கள் | 13 கிராமங்கள் |
| | பயன்பெறுவோர் | 535 குடும்பங்கள் |
| | புதிய கிராமங்கள் | 04 கிராமங்கள் |
| | பயன்பெறுவோர் | 136 குடும்பங்கள் |

## 2 பாலர் பாடசாலை:

| | | |
|---|---|---|
| 2-1 | ஆசிரியை ஊக்குவிப்பு | 28 ஆசிரியைகள் (23 பாடசாலைகள்) |
| 2-2 | தளபாடம் | 05 பாடசாலைகள் |
| 2-3 | உபகரணம் | 16 பாடசாலைகள் |
| 2-4 | கட்டடம் | 01 பாடசாலை |
| 2-5 | ஆசிரியைகளுக்கு பயிற்சி: | |
| | திட்டக் கிராமத்திலுள்ளது | 29 ஆசிரியைகள் |
| | வேறு கிராமத்தவர்கள் | 11 ஆசிரியைகள் |

## 3. தையல்:

| | | |
|---|---|---|
| 3-1 | பயிற்சி | |
| | 4 நிலையங்களில் பயின்றவர்கள் | 80 மாணவிகள் |
| | தைப்பவர் ஊக்குவிப்பு | 4 குடும்பங்கள் |
| | இயந்திரக் கடன் ஊக்குவிப்பு | 6 குடும்பங்கள் |

## 4. கல்வி:

| | | |
|---|---|---|
| 4-1 | ஆண்டு 2—11 வரை: | |
| | மாலைநேர வகுப்பு | 150 மாணவர்கள் |
| 4-2 | சங்கீத வகுப்பு | 30 மாணவிகள் |
| 4-3 | வெளிவாரிப் பட்டப்படிப்பு | 50 மாணவ/மாணவிகள் |

## 5. விற்பனை நிலையங்கள்:

5–1 ஆடை அகம்
5–2 புத்தகசாலை

## 6. நூலகம்:

| | |
|---|---|
| 6–1 புத்தகங்கள்: | 2500 புத்தகங்கள் |

## 7. நல்லொழுக்கம்:

| | |
|---|---|
| 7–1 மாணவர் நிகழ்ச்சி: 5 பாடசாலைகளில் இருந்து பங்குபற்றியோர் | 60 மாணவர்கள் |
| 7–2 ''ஒளி'' சஞ்சிகை வெளியீடு: காலாண்டுதோறும் | 1000 பிரதிகள் |

## 8 சுற்றாடல்:

| | |
|---|---|
| 8–1 காற்றுத் தடுப்பு வலையம் | 175 சவுக்கு |
| வல்லை மரநடுகை | 900 எருக்கலை |
| 8-2 மரநடுகை கிராமங்கள் | 123 மரங்கள் |
| 8–3 குளங்கள் | 50 மரங்கள் |

## 9. முகாம் பராமரிப்பு:
(வடமராட்சி கிழக்கு)

| | |
|---|---|
| 9–1 குறைநிரப்பு உணவூட்டல் | 250 சிறுவர்கள் |
| 9–2 சுகாதாரக் கல்வி | |
| 9-3 சீருடைகள் விநியோகம் | 800 மாணவர்கள் |
| 9–4 சுயதொழில் ஊக்குவிப்பு | 18 விதவைகள் |
| | 11 ஏனையோர் |
| 9-5 விதவைகள் உலர்உணவு (மாதாந்தம்) | 69 குடும்பங்கள் |

## 10. விசேட நிவாரணம்:

| | |
|---|---|
| 10–1 சென். தோமஸ் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை முனை (கொப்பி, பேனை விநியோகம்) | 53 மாணவர்கள் |
| 10–2 அம்பாள் வித்தியாலயம், அல்வாய் (சீருடை விநியோகம்) | 50 மாணவர்கள் |

10-3 மிகவும் வருமானம்குறைந்த தனிநபபர் 31 குடும்பங்கள்
(கொப்பி, சீருடை)

10-4 வெள்ள நிவாரணம்:
தனிப்பனை முகாம்/செம்பியன்பற்று
உலர் உணவு விநியோகம் — 2தடவை 80 குடும்பங்கள்

## 11. வேலைக்கான - உணவுத் திட்டம்:

10 சிறு குளங்கள் புனரமைப்பு 439 குடும்பங்கள்

## 12. கைப்பம்பி:

12-1 மணியகாரன் தோட்டம் பாடசாலை
கரணவாய் 225 மாணவர்கள்

12-2 மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன்
பாடசாலை, துன்னாலை 110 மாணவர்கள்

## 13. தளபாட விநியோகம்:

13-1 யா/ஆழியவளை சி. சி. தமிழ்
கலவன் வித்தியாலயம் 160 மாணவர்கள்
(40 சோடி மேசை வாங்கு, 4 கரும்பலகை)

13-2 யா/வெற்றிலைக்கேணி றோ, க. த. க.
பாடசாலை 68 மாணவர்கள்
(17சோடி மேசை வாங்கு 5கரும்பலகை)

13-3 யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா: 100 மாணவர்கள்
(25 சோடி மேசை வாங்கு 5 கரும்பலகை)

13-4 யா/நாகர்கோவில் அ. மி. த. க.
பாடசாலை: 120 மாணவர்கள்
(30 சோடி மேசை வாங்கு, 8கரும்பலகை
8ஆசிரியர் கதிரை-பலகையுடன்
30 பாலர் பாடசாலை கதிரை – 15 பாலர் பாடசாலை
மேசை)

## 14. விசர்நாய் தடுப்பு மருந்து:

(சுகாதாரப் பகுதியுடன் இணைந்து)

14-1 தடுப்பூசி போடப்பட்டது 1420 நாய்கள்

14-2 கொல்லப்பட்டது 60 நாய்கள்
(7 சுகாதாரப் பகுதிகளில்)

# போரூட் செய்திகள்
******* *****:***

1. போரூட் நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி 15-12-1992ல் யாழ்ப்பாணத்திலுள்ள திட்டங்களைப் பார்வையிட திட்ட உத்தியோகத்தருடன் வந்திருந்தார்.

2. முனைக் கிராமத்தில் வெளிச்சவீட்டுக்கு அண்மையான பகுதியினைக் கடல் அரிப்பில் இருந்து பாதுகாக்கும் திட்டத்தை ''வேலைக்கு உணவு'' என்ற அடிப்படையில் அமுலாக்குவதற்கு போரூட் வதிவிடப் பிரதிநிதி திரு. போல் ஹென்றிக் கீலன் அவர்கள் அனுமதி அளித்தார்.

3. முதல் தடவையாக ஆங்கிலத் தட்டச்சு சுருக்கெழுத்து வகுப்புக்கள் அலுவலகத்தில் தைமாதம் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன. இவ்வகுப்பு ஆறுமாத காலப்பயிற்சி நெறியாகும்.

4. வருமான ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடனைக் கிரமமாக மீளச்செலுத்தி - நிலுவை அற்ற சங்கங்களாக 1992ம் ஆண்டு இறுதிக்காலப் பகுதியில் பின்வரும் கிராமங்கள் விளங்குகின்றன:

   1) இன்பருட்டி
   2) சுப்பர்மடம்
   3) தம்பசெட்டி
   4) அல்வாய் தெற்கு
   5) கெருடாவில் மத்தி
   6) கெருடாவில் வடக்கு
   7) சற்கோட்டை
   8) முனை
   9) மாமுனை
   10) ஆழியவளை

5. 1993ம் ஆண்டில் முதல் ஆறுமாத காலத்திற்கும் மருதங்கேணி, குடத்தனை ஆகிய பகுதிகளில் தையற்பயிற்சி நிலையங்கள் இயங்கும் ஒவ்வொரு நிலையத்திலும் 20 மாணவிகள் பயிற்றப் படுவார்கள்.

6. தையல் ஊக்குவிப்புத் திட்டத்தில் 6 தையல் இயந்திரங்கள் கடன் அடிப்படையில் இலக்குக்குழு யுவதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

7. ''போரூட் பல்தொகுதி'' (FORUT Complex) தற்போது 14-12-92 முதல் மந்திகையில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதில்

1] நூலகம்
2] புத்தகசாலை
3] ஆடைஅகம்
என்பன அடங்கும்.

இங்கே நியாயமான விலையில் பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள், தைத்த ஆடைகள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

8. ஆண்டு 2-ல் இருந்து 6 வரையான இலக்குக் குழு மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்கள் 1993, தைமாதம் தொடக்கம் பின்வரும் இடங்களில் நடைபெறும்:

1] கரவெட்டி மேற்கு
2] தம்பசெட்டி
3] மூர்க்கம்
4] குடத்தனை
5] மருதங்கேணி
6] வத்திராயன் மத்தி

செம்பியன்பற்று, நாகர்கோவில் பகுதியிலுள்ள முகாம்களுக்கு இவ்வகுப்பு விஸ்தரிக்கப்படும்.

9. பாலர் பாடசாலை ஆசிரியை பயிற்சிகளுக்கான தகுதிவாய்ந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலக்குக்குழு அல்லாதவர்களிடம் கட்டணம் அறவிடப்படும்.

## அறிவித்தல்

### தையற்பயிற்சி

01] மருதங்கேணி, குடத்தனை ஆகிய இடங்களில் இயங்கவுள்ள தையற்பயிற்சி நிலையங்களில் இலக்குக்குழு அல்லாதோர் ரூபா 50/- மாதாந்தம் செலுத்திப் பயிற்சியிற் சேரமுடியும். விபரங்களுக்கு காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

02] எமது திட்டக்கிராமப் பாலர் பாடசாலை ஆசிரியைகள் தவிர்ந்த ஏனையோர் மாதாந்தம் ரூபா 50/- செலுத்திப் பாலர் பாடசாலை ஆசிரிய பயிற்சியில் பங்குபற்ற முடியும். விபரங்களுக்குக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# பூமியின் உடல் சூடேறுகிறது

மனிதனின் வாழ்க்கைக்கு சுற்றாடல் ஒரு நெருங்கிய நண்பன் போல் உதவி வந்திருக்கிறது. ஆனால் மனிதனோ தனது அறியாமையால் வாழவைத்துக் கொண்டிருக்கும் அந்தச் சுற்றாடலையே அழித்துக் கொண்டிருக்கிறான்.

சுற்றாடல் அழிவின் பாதிப்புக்களை ஆராயும் நோக்குடன் சென்ற 1992 ஜூன் மாதம் பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனேரோ நகரில் மாபெரும் பூமி மகாநாடு (Earth summit) கூடியது. இந்த உச்சி மகாநாட்டில் 114 உலகநாடுகளின் தலைவர்கள் கூடினர் வளர்முக நாடுகள் எவ்வாறெல்லாம் சுற்றாடலைப் பாதிக்கும் செயல்களைச் செய்கின்றன என்பவற்றையும், ஏழை மூன்றாம் உலகநாடுகள் எவ்வாறு சுற்றாடலை நல்லமுறையில் பேணிப் பயன்படுத்தலாம் என்பவற்றையும் ஆராய்வதே இதன் நோக்கமாக இருந்தது.

பூமியைச் சிறிதுசிறிதாகச் சூடேற்றும் காபனீரொட்சைட்டு வாயு பற்றி, இதனைப் பயன்படுத்தி பூமியின் சூட்டைச் சமப்படுத்தும் காடுகள் மரங்கள் எந்த முன்யோசனையுமின்றி அழிக்கப்படுவது பற்றி ஒரு சாசனம் தயாரிப்பதே இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

விஞ்ஞானிகள், தொழிற் புரட்சிக்குப் பின்னர் உலகம் அரை பாகை சூடு ஏறியிருக்கிறதென்றும், இப்போது வளர்முக நாடுகள் வெளியேற்றும் காபனீரொட்சைட்டினால் நூறு வருடத்தில் மூன்று பாகை வெப்பம் ஏறும் என்றும் தெரிவிக்கின்றனர்.

மூன்று பாகைதானே, என்ன செய்துவிடும் என்று கேட்கிறீர்களா? அது விளைநிலங்களை பாழ்நிலங்களாக்கும், எங்கும் வறட்சி ஏற்படும்; கடல் உயரும்; நூற்றைம்பது வருடத்திற்குள் மகாசமுத்திரங்கள் ஏழு மீற்றர் உயரும்; பல நிலப்பகுதிகள் காணாமல் போய்விடும். முன்னூறு சிறுதீவுகள் கடலுக்கு அடியில் போய்விடும், இதை விஞ்ஞானிகள் (Global warming) என்று குறிப்பிடுகிறார்கள்.

ஆதாரம்: ஹிந்து, சுபமங்களா
Economic Review

அட்டைப்படம்: நன்றி, ரமணி
["போதை" — பலாலி ஆசிரிய
கலாசாலை வெளியீடு]

# விற்பனை அறிவித்தல்

கீழ்க்காணும் பொருட்கள்

## குறைக்கப்பட்ட விலையில்

விற்பனைக்காக உள்ளன.

| | |
|---|---|
| **C. D.** 125 மோட்டார் சயிக்கிள் | 15000/- |
| **C.** 90. ,, ,, | 4000/- |
| மின் ஸ்திரிக்கைப் பெட்டி | 150/- |
| றோணியோ பிரதி செய்யும் இயந்திரம் | 7500/- |
| றெஜிபோம் பெட்டி | 160/- |
| மரப்பெட்டி சிறியது | 110/- |
| வெற்று பரல் | 200/- |

இவற்றை வாங்க விரும்புவோர் தயவுசெய்து காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

போரூட்,
யாழ் கிழக்கு காரியாலயம்,
தம்பசெட்டி வீதி,
பருத்தித்துறை.

**'OLI'** Quarterly-Published by; Forut-Jaffna East; Point-Pedro.
Printed at - Tamil Poonka Printers, Nelliady.